## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
## மேட்டூர் நகராட்சி

### மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர்அவர்களால் 31.05.2021ம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற உள்ளது.

### மன்றப் பொருள்

**1.** மேட்டூர் நகராட்சியில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற மற்றும் காலஞ்சென்ற பணியாளர்கள் ஓய்வூதியர் சங்கத்தின் சார்பில் வழக்கு தொடுத்து வழக்கு W.P.No.2560/2019-ல் முதல் பிரதிவாதியாக இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை துறை, சென்னை அவர்கள், இரண்டாவது பிரதிவாதியாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள், மூன்றாவது பிரதிவாதியாக ஆணையாளர், மேட்டூர் நகராட்சி ஆகியோரை வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. வழக்கு W.P.No.30333/2019-ல் முதல் பிரதிவாதியாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள், இரண்டாவது பிரதிவாதியாக நகராட்சி ஆணையாளர் மேட்டூர் அவர்கள், மூன்றாவது பிரதிவாதியாக இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை துறை சென்னை அவர்களையும், இணைத்து வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் பணியாளர்களுக்கு வழங்கபட வேண்டிய பணப்பயன்களான சிறப்பு சேமநலநிதி அதற்கு உண்டான வட்டி, ஈட்டிய விடுப்புக்கான பணப்பயன்கள், 5-வது ஊதியக்குழு நிலுவை தொகை மற்றும் சேமநலநிதி அதற்கு உண்டான வட்டி தொகையினை வழங்க வழக்கு W.P.No.2560/2019-ல் மற்றும் W.P.No.30333/2019-ல் தீர்ப்பு வழங்கப்பட்டதின் அடிப்படையில் வழக்குகளின் வாதுரையில் தெரிவித்துள்ள 71 நபர்களில் தகுதியான நபர்களுக்கு சிறப்பு சேமநல நிதி 6 நபர்களுக்கும், ஈட்டா விடுப்புக்கான பணப்பயன்கள் 4 நபர்களுக்கும், ஆறாவது ஊதியக்குழு நிலுவை தொகை 20 நபர்களுக்கும், 1994-1995 முதர் 2004-2005 வரையான சேமநலநிதி வட்டி தொகை 70 நபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் இருந்து மேற்படி பணியாளர்களுக்கு 2005-2006 முதல் 2019-2020 வயையான சேமநலநிதி வட்டி தொகை மட்டும் வழங்கபடாமல் நிலுவையாக இருந்த நிலையில் 2005-2006 முதல் 2016-2017 வரையிலான சேமநலநிதி வட்டி தொகையினை வழங்க கோரி கருத்துருக்கள் இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை சென்னை அவர்களுக்கு அனுப்பட்டதில் ந.க.எண்.ப.பா.1/15958/2020 நாள்:03.09.2020-ல் இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை சென்னை அவர்களால்ரூ.9,41,411/- ஒப்பளிப்பு செய்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளளது.

2005–06 முதல் 2016–17 இந்நகராட்சியில் வரையிலும் நிதி பற்றாக் குறையால் ஒவ்வொரு மாதமும் மொத்த ஊதியம் வழங்கப்படவில்லை, மாதந்தோறும் பணியாளர்களுக்கு நிகர ஊதியம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. அதனால் ஒவ்வொரு மாதமும் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதி தொகையை உரிய காலத்தில் அரசு கணக்கில் கருவூலகத்தில் செலுத்தப்படவில்லை. ஆகையால், வழக்கு தொடுத்த ஓய்வூதியர்கள் சங்கத்தினர் பணியாளர்களின் பணிகாலத்தில் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட உரிய சேமநலநிதி தொகைக்கு ஏற்ப வட்டி கணக்கிடப்பட்டு, மாதாமாதம் உரிய காலத்தில் செலுத்தியிருந்தால் கணக்கிடும் வட்டி தொகைக்கும், குறைவாக செலுத்தப்பட்டதால் கணக்கிடப்படும் வட்டித் தொகைக்கும் உரிய வித்தியாசத் தொகையை முந்தைய ஆண்டுகளில் கணக்கிடப்பட்டுள்ளதை போல் கணக்கிடு செய்யப்பட்டு பொது நிதியில் இருந்து வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டதால் வழக்கின் வாதுரையில் குறிப்பிட்டுள்ள 71 நபர்களில் தகுதியான 44

நபர்களுக்கு மட்டும் ஊதியத்தில் பிடித்தம் செய்து சேமநலநிதி கணக்கில் செலுத்தியிருந்தால், வர வேண்டிய வட்டித் தொகைக்கு ஏற்ப தொகை கணக்கிடப்பட்டுள்ளது.

உள்ளாட்சி நிதி தணிக்கை துறையில் பெறப்பட்ட 2005-2006 முதல் 2016-2017 வரையிலான சேமநலநிதி வட்டி தொகையினை 2005-2006 முதல் 2016-2017 வரை காலகட்டங்களில் பணிபுரிந்த பணியாளர்களுக்கு பகிர்தளிக்க பட்டியல் தயார் செய்யப்பட்டதில் வழக்கில் உள்ள 71 நபர்களில் 44 நபர்கள் மட்டுமே தொகையினை பெற தகுதியுடைவர்கள். அவ்வாறு பிரிக்கப்பட்ட தொகை 44 நபர்களுக்கு ரூ.1,58,684/- மட்டுமே வருகிறது மேலும் தனி நபர் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட தொகையாக ரூ.15,78,643/-ஆக வருகிறது. எனவே வித்தியாச தொகை ரூ.14,19,959/-யை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க இந்நகராட்சி நகர்மன்றத்தில் 26.02.2021 அன்று கூட்ட தீர்மான எண்.59 மூலம் அனுமதி பெறப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண்.17706/2018/எல்1 நாள்.24.03.2021–ல் வழக்கு எண்:30333/2019–ல் தமிழ்நாடு மாநகராட்சி மற்றும் நகராட்சிகளின் ஓய்வூதியர்கள் சங்கம் ஓய்வூதி பணப்பயன்களை வழுங்ககோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு பெறப்பட்ட தீர்ப்பின் மீது இதுவரையிலும் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் தவறும் பட்சத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர நேரிடும் என சங்கத்தினரின் வழக்கறிஞர் திரு.ஏ.ஆர்.நிக்சன் அவர்கள் அறிவிப்பு கடிதம் அனுப்பி உள்ளதாகவும், மேலும் நீதிமன்ற தீர்ப்பின் மீது நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருப்பது வருந்ததக்கதாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே திரு. ஏ.ஆர்.நிக்சன் வழக்கறிஞரின் அறிவிப்பு கடிதம் தொடர்பாக உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அதன் விவரத்தினை நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழக்கில் உள்ள பணியாளர்களில் தகுதியான 44 நபர்களுக்கு 2005–2006 முதல் 2016–2017 வரை காலகட்டங்களுக்கு உண்டான சேமநல நிதி வட்டி தொகை தனி நபர் ஊதியத்தில் பிடித்தம் செய்த தொகை கேற்ப வட்டி தொகை கணக்கிடப்பட்டு உண்மை தன்மை உறுதி செய்ய இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.4037/2012/பி3 நாள்:26.03.2021 மூலமாக உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை, சேலம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேற்படி உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை, சேலம் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தின் நகல் மற்றும் வழக்கின் தீர்ப்பாணையின் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து எதிர்வாதியின் வழக்கறிஞர் திரு.ஏ.ஆர்.நிக்சன் அவர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள இரண்டு கடிதங்கள் மற்றும் உரிய விளக்கங்கள் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சேலம் அவர்களுக்கு, இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை துறை சென்னை அவர்களுக்கு, உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை துறை சேலம் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இப்பொருள் குறித்து சேலம் உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை அவர்களின் கடித ந.க.எண்.368/அ1/2021, நாள்:12.04.2021–ல் நகராட்சி பணியாளர்களின் ஊதியத்தில் இருந்து மாதந்தோறும் பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதி தொகைகள் உடனுக்குடன் கருவூல கணக்கில் செலுத்தபட வேண்டும். ஆனால் 2005-2006-ஆம் ஆண்டு முதல் 2016-2017-ம் ஆண்டு முடிய சேமநல நிதி தொகைகள் கருவூலகத்தில் மிகவும் காலதாமதமாக செலுத்தப்பட்டு வந்துள்ளது, அதனால் ஆண்டு தோறும் கருவூல இருப்பில் உள்ள சேமநலநிதி தொகைக்கே வட்டி தொகை ரூ.9,41,411/- உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்குநரகத்தால் ஒப்பளிப்பு செய்யபட்டது என்று

தெரிவித்துள்ளார் . மேலும் பணியாளர்களுக்கு வட்டி தொகை வழங்க கணக்கீடு செய்யப்பட்டுள்ள பட்டியலினை முன் தணிக்கையில் சரிபார்த்து அளிக்க வழிவகை இல்லாததால், இப்பொருள் குறித்து தங்கள் நிர்வாக (நகராட்சி நிர்வாக) அளவிலேயே நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சூழ்நிலையில், நகராட்சி ஓய்வு பெற்ற பணியாளர்களின் நலன் கருதியும், சென்னை உயர்நீதி மன்ற தீர்ப்பினை ஏற்று ஓய்வு பணப்பயன்களை உடன் வழங்க வேண்டியுள்ளதால் ஓய்வு பெற்ற நகராட்சி பணியாளர்களுக்கு வித்தியாச தொகை ரூ.14,19,959-யை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் நீதி மன்ற அவமதிப்பு வழக்கு தவிர்க்கு பொருட்டு 2017–2018 முதல் 2019–2020 வரை ஆண்டுகளுக்கான சேமநலநிதி வட்டி தொகையினை வழங்க கோரி இயக்குநர், உள்ளாட்சி நிதி துறை சென்னை அவர்களுக்கு உரிய கருத்துரு அனுப்பி மேல் நடவடிக்கை தொடர மன்றத்தின் பார்வைக்கு, அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகராட்சி ஓய்வு பெற்ற பணியாளர்களின் நலன் கருதியும், சென்னை உயர்நீதி மன்ற அவமதிப்பு வழக்கினை தவிர்க்கும் பொருட்டு வித்தியாசத் தொகையினை உடன் நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கலாம்.
3. 2017–2018 முதல் 2019–2020 வரை ஆண்டுகளுக்கான சேமநலநிதி வட்டி தொகை பெற கருத்துரு தயார் செய்து இயக்குநர், உள்ளாட்சி நிதி துறை சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கலாம்.

**(ந.க.எண்.7292/2012/பி2)**

**தீர்மான எண் 60 நாள் 31.05.2021**

## அனுமதிக்கப்பட்டது

**2.** திரு.எம்.ஜெயசீலன் என்பவர் கருணை அடிப்படையில் வேலை வழங்கக்கோரி, சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No.5416 of 2021 வழக்கு தொடர்ந்துள்ளார். ஆணையாளர், மேட்டூர் நகராட்சி அவர்களை 2ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கினை நகராட்சி சார்பில் ஏற்று நடத்துமாறு திரு.லூர்து பால் மௌரியா சென்னை அவர்களை கோரப்பட்டுள்ளது. வழக்கு செலவினம் முழுவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.519/2021/ எச்1)**

**தீர்மான எண் 61 நாள் 31.05.2021**

## அனுமதிக்கப்பட்டது

**3.** இந்நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில் உள்ள தெருக்கள் மற்றும் சாலையோரம் வளர்ந்துள்ள புல் மற்றும் செடிகளை வெட்டுவதற்கு பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தி வரும் 4 புல் வெட்டும் இயந்திரங்களுக்கு பெட்ரோல்/டீசல் மற்றும் ஆயில் தேவைப்படுவதால் 2021–22 ம் ஆண்டிற்கு நேரடியாக M/S..மகாலட்சுமி

டிரேடர்ஸ் (Indian Oil Dealers), மேட்டூர் அவர்களிடம் வாங்கிக் கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவு தொகை ரூ.**4,00,000/–**க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) அனுமதிக்கலாம்.
2) இச்செலவு தொகையினை வருவாய் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.876/2021/எச்1)**

**தீர்மான எண் 62 நாள் 31.05.2021**

## அனுமதிக்கப்பட்டது

**4.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்.9661/ஜே2/2021, நாள்.11.05.2021-ல் இந்நகராட்சிக்கு கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு பணிகளுக்கு தமிழக அரசின் பேரிடர் மேலாண்மை நிதி(SDRF)யில் இருந்து ரூ.50.00 இலட்சம் ஒதுக்கீடு செய்து உத்திரவு வரப்பெற்றுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.9691/ஜே2/2021-2, நாள்.21.05.2021-ல் கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையினை கீழ்க்கண்ட செலவினங்களுக்கு பயன்படுத்த வேண்டும் என தெரிவிக்கப்படுள்ளது.

**" The grant should be utilized for engagement of various activities relate to containment / prevention of COVID-19 viz., Procurement of disinfection items, PPE, Masks and Gloves, engaging LCV's for mobile COVID-19 testing, printing IEC materials and fever survey forms, Barricading Containment Zones, providing logistic support for vaccination camps "**

மேற்கண்ட அறிவுரைகளுக்கிணங்க, இந்நகராட்சி கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு பணிகளுக்கு ஏற்படும் செலவினங்களை மேற்படி பேரிடர் மேலாண்மை நிதி(SDRF) ஒதுக்கீட்டில் இருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1113/2021/எச்1)**

**தீர்மான எண் 63 நாள் 31.05.2021**

## அனுமதிக்கப்பட்டது

**5.** நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.19775/ஜே2/2019-3, நாள்.15.12.2020-ல் அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட முடி திருத்தகம்/அழகு நிலையம்/ஸ்பா/மசாஜ் நிலையம் நடத்துவோர் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம்/1920) பிரிவு 249-ன்படி தவறாமல் உரிமம் பெற்றுக்கொள்வது குறித்து **மக்கள் செய்தி தொடர்பு அலுவலர், மக்கள் செய்தி தொடர்பு அலுவலகம், சேலம்** அவர்களின் வழியே தினத்தந்தி நாளிதழில் அறிவிக்கை விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.அதற்கான செலவுத் தொகை ரூ.**9,148/-**ஐ தினத்தந்தி நாளிதழுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

(அ). மன்றம் அனுமதிக்கலாம்.

(ஆ). மேற்காண் செலவுத் தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.3409/2020/எச்1)**

**தீர்மான எண் 64 நாள் 31.05.2021**

**அனுமதிக்கப்பட்டது**

**6.** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் மூலம் கொசுக்களை கட்டுப்படுத்துவதற்கு நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில் உள்ள தெருக்கள் மற்றும் வீடுகளில் விடுதலின்றி கொசுப்புகை மருந்து கொண்டு புகை அடிக்க, புகையடிக்கும் இயந்திரத்திற்கு பெட்ரோல்/டீசல் மற்றும் ஆயில் தேவைப்படுவதால் 2021–2022 ஆம் ஆண்டிற்கு நேரடியாக M/S..மகாலட்சுமி டிரேடர்ஸ் (Indian Oil Dealers), மேட்டூர் அவர்களிடம் வாங்கிக் கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவு தொகை ரூ.10,00,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1) அனுமதிக்கலாம்.
2) இச்செலவு தொகையினை வருவாய் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.875/2021/எச்1)**

**தீர்மான எண் 65 நாள் 31.05.2021**

**அனுமதிக்கப்பட்டது**

**7.** இந்நகராட்சிக்கு எல்லைக்குள் உள்ள 19 இனங்களின் குத்தகை உரிமக்காலம் 31.03.2021 ஆம் தேதியுடன் முடிவடைகிறது. மேற்படி 01.04.2021 முதல் புதிதாக ஏலம் விட்டு ஒப்படைக்க வேண்டி உள்ளது. இந்நிலையில் கடந்த 26.02.2021 அன்று சட்டமன்ற பேரவை தேர்தல் 2021 அறிவிக்கப்பட்டதால், தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்துவிட்டது. எனவே தேர்தல் நடத்தை விதிமுறைகள் முடிவடையும் வரையிலும் புதிதாக பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத நிலை உள்ளது. எனவே தற்போது இப்பொருள் குறித்து நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை– யிலிருந்து ந.க.எண்.5304/2021/ஆர்2, நாள்.16.03.2021 எண்ணிட்ட சுற்றறிக்கை வரப்பெற்றுள்ளது. மேற்படி சுற்றறிக்கையில் 06.04.2021 அன்று சட்டமன்ற தேர்தல் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், நகராட்சிகளில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் தேர்தல் நடத்தை விதிகள் முடிவுறும் காலம் வரை நிறுத்தி வைக்கவும், அவ்வினங்களை தற்போது ஏலம் எடுத்து நடத்தி வரும் குத்தகைதாரர்களே தொடர்ந்து நடத்தவும், அவர்களிடமிருந்து ஏற்கனவே வசூலித்து வரும் தொகையினை வசூலிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து இந்நகராட்சியில் மேற்படி உரிமம் முடிவடையும் அனைத்து இனங்களின் உரிமதாரர்களுக்கும் இவ்விவரங்கள் தெரிவிக்கப்பட்டு அறிவிப்புகள் அனுப்பப்பட்டது. மேற்படி அனுப்பப்பட்ட அறிவிப்புகளின் அடிப்படையில் கீழ்க்காணும் குத்தகை உரிம இனங்களின் உரிமதாரர்கள்

மட்டுமே தேர்தல் நடத்தை விதிகள் முடிவுறும் வரையிலும் உரிமத்தை தொடர்ந்து நடத்திட ஒப்புதல் தெரிவித்து மனு செய்துள்ளார்கள்.

I.

| வ. எண். | உரிமதாரர் பெயர் | உரிம இன விவரம் | உரிமத் தொகை |
|---|---|---|---|
| 1. | திருமதி.ஏ.ஆர்.பி.ஈஸ்வரி,<br>15/ஏ, கூலி லைன்,<br>மேற்கு மெயின் ரோடு,<br>தினசரி மார்க்கெட், மேட்டூர். | மேட்டூர் கேம்ப் தினசரி அங்காடியில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ரூ.2,66,621/- |
| 2. | திரு.கே,.ராஜா,<br>த/பெ.காளியப்பன்,<br>155ஏ4, ராஜிவ் நகர்,<br>சேலம் கேம்ப், மேட்டூர். | சேலம் கேம்ப் தினசரி அங்காடியில் இறைச்சிக் கடை (எண்.9 மற்றும் 10 உட்பட) கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ரூ.5,145/- |
| 3. | திரு.ஏ.பரமேஸ்வரன்<br>த/பெ.அம்மாசி,<br>இராஜாஜி நகர்,<br>மாதையன் குட்டை, மேட்டூர். | மேட்டூர் கேம்ப் மீன் அங்காடியில் உள்ள 16 கடைகளில் இறைச்சிக் கடை வைப்பவர்களிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ரூ.5,577/- |
| 4. | திரு.ஏ.பரமேஸ்வரன்<br>த/பெ.அம்மாசி,<br>இராஜாஜி நகர்,<br>மாதையன் குட்டை, மேட்டூர். | மேட்டூர் கேம்ப் நவீன ஆடு வெட்டும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ரூ.13,570/- |
| 5. | திருமதி.சந்திரா<br>காவேரி நகர்,<br>மேட்டூர் | மேட்டூர் கழிவு நீர்ப் பண்ணையில் உள்ள 427 தென்னை மரங்களின் பலன்களை மட்டும் அனுபவிக்கும் உரிமம் | ரூ.32,478/- |
| 6. | திரு.சீனிவாசன்,<br>த/பெ.குணசேகர்,<br>காவேரி நகர்,<br>மேட்டூர். | வார்டு எண்.15, நான்கு ரோடு பாலம் அருகில் புதிதாக கட்டப்பட்டுள்ள குளியலறையுடன் கூடிய கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ரூ.4,778/- |

மீதமுள்ள கீழ்க்காணும் இனங்களுக்கு இந்நகராட்சி பணியாளர்களைக் கொண்டு துறை மூலம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

II.

| வ. எண். | உரிம இன விவரம் |
|---|---|
| 1. | மேட்டூர் கேம்ப் பேருந்து நிலையத்தில் பேருந்து நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 2. | மேட்டூர் கேம்ப் பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள கட்டணக் கழிப்பறை மற்றும் குளியல் அறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் |
| 3. | மேட்டூர் புகைவண்டி நிலைய தினசரி மார்க்கெட்டில் கட்டப்பட்டுள்ள கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் |
| 4. | மேட்டூர் கழிவு நீர்ப் பண்ணையில் உள்ள யானைப்புல் வளர்த்து அதன் பலன்களை அனுபவிக்கும் உரிமம் |
| 5. | சேலம் கேம்ப் ஞாயிறு தோறும் கூடும் வாரச்சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் |

எனவே குத்தகை இனங்களை தற்போது ஏலம் எடுத்து நடத்தி வரும் குத்தகைதாரர்களே தொடர்ந்து நடத்தவும், அவர்களிடமிருந்து ஏற்கனவே வசூலித்து வரும் தொகையினை வசூலிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டு வரப்பெற்ற நகராட்சி நிர்வாக ஆணையரின் சுற்றறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும், வரிசை எண். I.ல் கண்டுள்ள உரிம இனங்களை பழைய ஏலதாரர்களுக்கே தொடர்ந்து வழங்கிடவும், வரிசை எண். II.ல் கண்டுள்ள உரிம இனங்களை இந்நகராட்சி பணியாளர்களைக் கொண்டு துறை மூலம் வசூலித்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளதாலும், உரிம இனத்தை உடன் ஒப்படைக்க வேண்டியும், நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டும் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று உத்தரவு வழங்கியமைக்கும், துறை மூலம் வசூல் பணி மேற்கொண்டமைக்கும் அதற்குரிய செலவினங்களுக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3636/2020/அ2)**

**தீர்மான எண் 66 நாள் 31.05.2021**

**அனுமதிக்கப்பட்டது**

**8.** மேட்டூர் நகராட்சியில் மாதையன்குட்டை பகுதியில் எரிவாயு தகன மேடை இயக்கவும் பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ளவும் மேட்டூர் அமைதி அறக்கட்டளை பணிக்கு நகர்மன்ற தீர்மானம் எண்.32 நாள் 28.03.2018–ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நகராட்சியுடன் புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையல் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு 3 ஆண்டுகள் முடிவடைய உள்ளது.

மேற்கண்ட எரிவாயு தகன மேடையை தற்சமயம் 3 ஆண்டுகள் முடிவடையும் தருவாயில் உள்ளதால் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை மேலும் 3 ஆண்டுகளுக்கு புதுப்பித்து தருமாறு 27.05.2021–ம் தேதிய கடிதத்தில் மேட்டூர் அமைதி அறக்கட்டளை கேட்டுக் கொண்டுள்ளது.

மேட்டூர் அமைதி அறக்கட்டளை கடந்த 3 வருடங்களாக எரிவாயு தகனமேடை பராமரிக்கப்பட்டு நல்ல முறையில் இயக்கியும் பொது மக்கள் பயன்பெறும் வகையில் பணிகள் நடைபெற்று வருகின்றது.

எனவே அரசின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு எரிவாயு தகன மேடை பராமரிக்கவும் மற்றும் இயக்கவும் மேட்டூர் அமைதி அறக்கட்டளைக்கு 31.05.2021 முதல் நகராட்சி நிர்வாகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு புதுப்பித்துக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.9957/2006/இ1)**

**தீர்மான எண் 67 நாள் 31.05.2021**

**அனுமதிக்கப்பட்டது**

**9.** இந்நகராட்சிக்கு 2021–2022 ஆம் நிதியாண்டிற்கு அலுவலக உபயோகத்திற்கு தேவையான A4, Legal, A3 பேப்பர், படிவங்கள் மற்றும் பதிவேடுகள், எழுது பொருட்கள், அம்மா உணவகத்திற்கு தேவையான டோக்கன்கள் ஆகியவற்றை தமிழ்நாடு பல்நோக்கு சேவை தொழில் கூட்டுறவு சங்கத்தில் வாங்கி கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.10.00 லட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1112/2021/பி3)**

**தீர்மான எண் 68 நாள் 31.05.2021**

**அனுமதிக்கப்பட்டது**

10. மேட்டூர் நகராட்சிக்கு சொந்தமான கழிவுநீர் பண்ணையில் உள்ள யானை புல் வெட்டி விற்பனை செய்யும் உரிமம் 2021–2022 ம் ஆண்டு ஏலம் போகாததால், நகராட்சி பணியாளர்கள் மூலம் பொது விற்பனை செய்ய வேண்டியுள்ளது. ஏற்கனவே மேட்டூர் நகர்மன்ற தீர்மான எண்.62 நாள்.05.03.2008 ன் படி ஒரு கிலோ யானைபுல் 01.04.2008 முதல் தொண்ணூறு பைசாவாக நிர்ணயம் செய்யப்பட்டது. தற்போது 13 ஆண்டுகள் முடிவடைந்த நிலையில் விலை தொகையை திருத்தி அமைக்க வேண்டி கொளத்தூர் வட்டார வேளாண்மை துறை உதவி இயக்குநர் அவர்கள் நேரில் ஆய்வு செய்து, அதன் தொகையை ஒரு கிலோ ரூ.1.80/– (ஒரு ரூபாய் எண்பது பைசா மட்டும்) என விலை நிர்ணயம் செய்து கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

கழிவு நீர் பண்ணையில் உள்ள யானை புல் 2021–2022ம் ஆண்டு பொது விற்பனை செய்ய கிலோ ஒன்றுக்கு ரூ.1.80 (ஒரு ரூபாய் எண்பது பைசா மட்டும்) மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருள் | 01.04.2008 முதல் நடைமுறையில் உள்ள தொகை ரூ. | தற்போது உயர்வு செய்ய உத்தேசிக்கும் தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | யானை புல் கிலோ ஒன்றிற்கு | ரூ.0.90/– (தொண்ணூறு பைசா மட்டும்) | ரூ.1.80/– (ஒரு ரூபாய் எண்பது பைசா மட்டும்) |

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1108/2021/அ2)**

**தீர்மான எண் 69 நாள் 31.05.2021**

## அனுமதிக்கப்பட்டது

**11.** நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் கடிதம், ந.க.எண்.2652/2018/தி2/, நாள்.11.03.2021-ல் நகராட்சிகளில் உபயோகத்தில் இல்லாத பழைய வாகனங்களை கழிவு செய்து, மோட்டார் வாகன பராமரிப்பு துறை இயக்குநரிடமிருந்து கழிவு சான்று (Contemnation Certificate) பெற்று அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, மேட்டூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் தற்போது உபயோகத்தில் இல்லாத கீழ்க்கண்ட வாகனங்களை கழிவு செய்து, மோட்டார் வாகன பராமரிப்பு துறை இயக்குநரிடமிருந்து கழிவு சான்று (Contemnation Certificate) பெறவும், பொது ஏலம் விடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வாகனம் எண் | வாகனத்தின் வகைப்பாடு | வாகனம் வாங்கப்பட்ட ஆண்டு | கழிவு செய்ய வேண்டிய வருடம் |
|---|---|---|---|---|
| 1 | TN 27 T 7769 | மினி டிப்பர் லாரி | 1997 | 2013 |
| 2 | TN 27 W 1953 | மினி டிப்பர் லாரி | 1999 | 2015 |

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.741/2021/எச்1)**

**தீர்மான எண் 70 நாள் 31.05.2021**

## அனுமதிக்கப்பட்டது

**12.** இந்நகராட்சி பகுதியில் உள்ள நகரளவு வார்டு டி, பிளாக் 13, நகரளவு எண் 4/42ல் அமைந்துள்ள 6.50. ஏக்கர் நிலத்தினை ஒப்புதல் பெற்ற மேட்டூர் முழுமைத்திட்டத்தில் தொழிற்சாலை உபயோக பகுதியிலிருந்து குடியிருப்பு உபயோக பகுதியாக நிலப்பயன் மாற்றம் ,வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (ந.வ. 4(1) )துறை அரசாணை எண் (2டி) எண்126 நாள் 05.08.2019 ன் படி நிலபயன் மாற்றம் செய்ததை ரத்து செய்ய கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் மேட்டூர் சிட்கோ தொழிற்பேட்டை சங்க தலைவர் திரு மாதப்பன் என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No.1724 of 2021 மூலம் வழக்கு தொடர்ந்துள்ளார். ஆணையர் மேட்டூர் நகராட்சி அவர்களை4ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கினை நகராட்சி சார்பில் ஏற்று நடத்துமாறு திரு.லூர்து பால் மௌரியா சென்னை அவர்களை கோரப்பட்டுள்ளது. வழக்கு செலவினம் முழுவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

ஆணையரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.191 /2021/ எப்1)**

**தீர்மான எண் 71 நாள் 31.05.2021**

## அனுமதிக்கப்பட்டது

**13.** இந்நகராட்சி பகுதியில் உள்ள நகரளவு வார்டு டி, பிளாக் 13, நகரளவு எண் 4/42ல் மெசர்ஸ் சன் பிரைட் இண்ட்ஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிட் அவர்கள் மேட்டூர் சிட்கோ தொழிற்பேட்டை பகுதியில் உத்தேச குடியிருப்பு மனைபிரிவு ஒப்புதல் பெற அனுமதிக்க வேண்டாம் என மேட்டூர் சிட்கோ தொழிற்பேட்டை சங்க தலைவர் திரு மாதப்பன் என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No.1098 of 2021 மூலம் வழக்கு தொடர்ந்துள்ளார். ஆணையர் மேட்டூர் நகராட்சி அவர்களை 4ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கினை நகராட்சி சார்பில் ஏற்று நடத்துமாறு திரு.லூர்து பால் மௌரியா சென்னை அவர்களை கோரப்பட்டுள்ளது. வழக்கு செலவினம் முழுவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

ஆணையரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.160/2021/ எப்1)**

**தீர்மான எண் 72 நாள் 31.05.2021**

## அனுமதிக்கப்பட்டது

**14.** இந்நகராட்சி பகுதியில் உள்ள நகரளவு வார்டு ஏ ,பிளாக்39, நகரளவு எண் 61 பொன்னகர் பள்ளி அருகில் பொது பாதையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரி சென்னை உயர்நீதி மன்ற வழக்கு W.P.No.9149/2007 ன் 13.07.2007 தேதிய தீர்ப்பில் தெரிவித்துள்ளபடி 1 முதல் 4 வரையிலான பிரிதிவாதிகள் அகற்றி தரக்கோரி திரு.எல்.பாலகிருஷ்ணன் த/பெ (லேட்) லட்சுமணன் என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு W.P.No.20328/2008 தொடர்ந்துள்ளார். 10.01.2020 தேதிய தீர்ப்பின் படி அறிவிப்பு வழங்கி விசாரணை செய்து ஆக்கிரமிப்பினை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டதால் இவ்வலுவலக கடிதம் ந.க.எண் 1769/2018/ எப்1 நாள் 18.08.2020 ன் படி வாதி திரு.எல்.பாலகிருஷ்ணன் த/பெ (லேட்) லட்சுமணன், 5ம் பிரதிவாதி திருமதி. ருக்மணி க/பெ,ராஜகோபால், ஆகிய இருவரையும் 21.08.2020 தேதி 12.00 மணிக்கு விசாரணைக்கு அழைத்து விசாரணை செய்யப்பட்டது.

21.08.2020 ம் தேதிய விசாரணை செய்து வாதி மற்றும் 5ம் பிரதிவாதி அளித்த வாக்கு முலம் குறித்த விசாரணை செய்து அறிக்கை சமர்பிக்குமாறு (நில உரிமம் குறித்து விசாரணை செய்து அறிக்கை

சமர்பிக்குமாறு சார் ஆட்சியர் ,மேட்டூர் ) இவ்வலுவலக கடிதம் ந.க.எண் 1769/2018/ எப்1 நாள் 21.08.2020 கோரப்பட்டது. அறிக்கை சமர்பிக்காத நிலையில் திரு.எல்.பாலகிருஷ்ணன் த/பெ (லேட்) லட்சுமணன், என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதி மன்ற அவமதிப்பு வழக்கு 896/2020in W.P.No,20328/2018 மூலம் ஆணையாளர், மேட்டூர் நகராட்சி அவர்களை பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார். எனவே மேற்படி வழக்கினை நகராட்சி சார்பில் ஏற்று நடத்துமாறு திரு.லூர்து பால் மௌரியா, நகராட்சி வழக்கறிஞர் அவர்களை கோரப்பட்டுள்ளது. வழக்கு செலவினம் முழுவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

ஆணையரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1769/2018/ எப்1)**

**தீர்மான எண் 73 நாள் 31.05.2021**

**அனுமதிக்கப்பட்டது**

**ஆணையாளர் (ம) தனி அலுவலர்,**
**மேட்டூர் நகராட்சி.**